# சீர்காழி நகராட்சி



2026-ம் ஆண்டு ஜீன் மாதம் 05- ஆம் தேதி நாள்.05.06.2026 வெள்ளிக்கிழமை மாலை 05.30 மணிக்கு நகர்மன்ற கூடத்தில் அவசரக் கூட்டம் நடவடிக்கை.

திருமதி.R.துர்காபரமேஸ்வரி.MBA.,
நகர்மன்றதலைவர்,
சீர்காழிநகராட்சி.

| | | |
|---|---|---|
| பொருள் எண்-1 | தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 ஏப்ரல் 1- 2026 முதல் அமலுக்கு வந்துள்ளன. அதனை திறம்பட செயல்படுத்திடும் பொருட்டு மாண்புமிகு உச்சநீதி மன்றம் சிவில் மேல் முறையீட்டு எண் 6174/2023 மேல் முறயீட்டு நாள் 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 19.ஏப்ரல் 29 மற்றும் மே 5-ல் தெரிவித்துள்ள படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு விரிவான வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. அதன்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதன்மை பிரதிநிதிகளான நகர்மன்ற தலைவர்.துணைத்தலைவர் மற்றும் வார்டு உறுப்பினங்கள் ஆகியோரை குப்பைகளை உருவாகும் இடத்திலேயே பிரித்தல் குறித்த கல்விக்கான முதன்மை ஒருங்கியைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள். உலக சுற்றுச்சூழல் தினமான 2026 ஜீ 5 – ஆம் தேதி முதல் 2025 ஜீன் 12 வரையிலான ஒரு வார கால விழிப்புணர்வு பரிந்துரை மற்றும் கூட்டு நடவடிக்கை மூலம் திடக்கழிவுகளை நான்கு வகையினங்களாக பிரித்தல், பொது இடங்களில் குப்பைகளை கொட்டாமை மற்றும் குப்பைகளை எரிக்காமை குறித்து விழிப்புணர்வை வீடு வீடாக சென்று ஏற்படுத்துவது குறித்து மக்களால் தேர்ந்தெடுக்ககப்பட்ட உறுப்பினர்களுக்கு பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>** : திடக்கழிவு மேலாண்மை விதிகள் – 2026 ஐ மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br>ந.க.எண் 000191/2026/எச்-1 | தீர்மானஎண்:1438<br>நாள்: **05-06-2026**<br>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.<br>திருத்தம்: **1)**உலக சுற்றுசூழல் தினமான **2026** ஜுன் **5-**ஆம் தேதி முதல் **2026** ஜுன் **12** வரையிலான என திருத்தப்பட்டது.<br>**2)**திடக்கழிவு மேலாண்மை விதிகள் என திருத்தப்பட்டது. |

நாள் 05.06.2026

இடம்.சீர்காழி

(ஒம்) திருமதி.R.துர்காபரமேஸ்வரி.MBA.,
நகர்மன்றதலைவர்,
சீர்காழிநகராட்சி.

# சீர்காழி நகராட்சி



**2026-ம் ஆண்டு ஜூன் மாதம் 25- ஆம் தேதி நாள்.25.06.2026 வியாழன்கிழமை**

**காலை. 11.00 மணிக்கு நகர்மன்ற கூடத்தில் சாதாரணக் கூட்டம் நடவடிக்கை.**

திருமதி.**R**.துர்காபரமேஸ்வரி.**MBA.,**
நகர்மன்றதலைவர்,
சீர்காழிநகராட்சி.

<table>
<tr>
<td>பொருள் எண்- 1</td>
<td>சீர்காழி நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக பயன்படுத்தப்பட்டு வந்த கீழ்கண்ட வாகனங்களுக்கு இன்சூரன்ஸ் முடிவடைந்து விட்டதால் வாகனங்களுக்கு இன்சூரன்ஸ் புதுப்பிக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.50இலட்சம் ஆகும் இச்செலவீனத் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>வாகனத்தின் பெயர்</th><th>வண்டி எண்</th></tr>
<tr><td>1</td><td>TATA ACE</td><td>TN 82 W 5428</td></tr>
<tr><td>2</td><td>TATA ACE</td><td>TN 82 W 5440</td></tr>
<tr><td>3</td><td>TATA ACE</td><td>TN 51 T 4966</td></tr>
<tr><td>4</td><td>TATA ACE</td><td>TN 82 T 4986</td></tr>
<tr><td>5</td><td>TATA ACE</td><td>TN 82 T 4924</td></tr>
<tr><td>6</td><td>TATA ACE</td><td>TN 82 T 4952</td></tr>
<tr><td>7</td><td>TATA ACE</td><td>TN 82 W 7907</td></tr>
<tr><td>8</td><td>TRACTOR</td><td>TN 82 Z 8640</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>
ந.க.எண்.1193/2020/எச்1.</td>
<td>தீர்மானஎண்:1439<br>நாள்: 25-06-2026<br>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்- 2</td>
<td>சீர்காழி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மலக்கசடுகளை சேகரிப்பதற்கு தூய்மை இந்தியா திட்டம் நகர்புறம் 2.0 2023-2024-ன் கீழ் புதியதாக வாங்கப்பட்டுள்ள கழிவு நீர் அகற்றும் வாகனத்தை (வாகன எண்:TN82S1312) ஒரு எண்ணிக்கையிலான ஓட்டுநரை கொண்டு இயக்குவதற்கு ஒப்பந்த அடிப்படையில் திருமதி.டி.ஜீவா என்ற ஒப்பந்த்தார்ருக்கு 20.09.2025 வரை இந்நகர்மன்ற தீர்மான எண்:1285 நாள்:30.05.2005-இன் படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்</td>
<td>தீர்மானஎண்:1440<br>நாள்:25-06-2026<br>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | ந.க.எண்.4862/2024/ஈ1 நாள்.10.07.2024 ஆம் தேதிய உத்திரவில் குறிப்பிட்டுள்ள, விலை விகிதமான நாள் ஒன்றுக்கு ரூ.640/-வீதம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் (EPF-13%) நாள் ஒன்றுக்கு ரூ.723ஆகும். மேலும் பணிகள் மேற்கொள்ள 1 நபர்களுக்கு ஒரு மாத கால ஊதியம் ரூ.21690 /-ஆகும். ஒப்பந்த பணிக்காலம் 31.03.2026-யுடன் முடிவுபெற உள்ளதால் மேற்படி பணியின் அவரச அவசியம் கருதி 01.04.2026 முதல் 31.09.2026 வரை ஒப்பந்த பணிக்காலம் நீட்டிப்பு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2273/2024/எச்1. | |
| பொருள் எண்- 3 | சீர்காழி நகராட்சியில் நுண்ணுயிர் உரக்கிடங்கில் சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் கழிவு பொருட்களை அரியலூர் செல்வதற்கு லாரி மூலம் எடுத்து செல்ல வேண்டி உள்ளது. மேற்படி உரக்கிடங்கில் பிளாஸ்டிக் கழிவுகள் அதிக அளவில் தேங்கியுள்ளதால் அதை அப்புறப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். எனவே தனியார் வாகனம் மூலம் எடுத்து செல்வதற்கு 3.50 **லட்சத்திற்கு** பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் : 2462/2024/எச்1 | தீர்மானஎண்:**1441**<br>நாள்:**25-06-2026**<br>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்- 4 | தூய்மை பாரத இயக்கம் மூலம் தூய்மையான நகரங்கள் பட்டியல் வெளியிட நகரத்தின் தூய்மை ஆய்வுகள் குறித்து தினசரி நாளிதழ்களின் பிரசுரம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வாய்மொழி உத்தரவின் படி பணி மேற்கொள்ளளப்பட்டது.. இதற்கான செலவினம் தொகை ரூ.26,400/- ஆகும். இச்செலவீனத் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் : 1592/2023/எச்1 | தீர்மானஎண்:**1442**<br>நாள்:**25-06-2026**<br>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்- 5 | சீர்காழி நகராட்சி நகர் முழுவதும் 24 வார்டுகளில் 464 தெரு நாய்கள் உள்ளது. தெரு நாய்களுக்கு வெறிநாய் தடுப்பூசி வருடம் 1 முறை போட வேண்டும். ஒரு ஊசியின் விலை ரூ.160 வீதம் தோராயமாக கணக்கிடப்பட்ட 464 நாய்களுக்கு 464 x 160 = ரூ.74240/. செலவினம் ஆகும். பொதுமக்களின் நலன் கருதியும் உச்சநீதி மன்ற தீர்ப்பின் படியும் இப்பணியை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி ரூ.74,240/. ஆகும். இச்செலவீனத் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது<br><u>அலுவலக குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் : 3197/2020/எச்1 | தீர்மானஎண்:**1443**<br>நாள்:**25-06-2026**<br>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| பொருள் எண்- 6 | சீர்காழி நகராட்சி நகர் முழுவதும் 24 வார்டுகளில் 464 தெரு நாய்கள் சுற்றி திரிகின்றது. தெருநாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த மாவட்ட ஆட்சியர் மூலம் தற்காலிகமாக செம்பனார் கோவில் ABC நிலையத்தில் கருத்தடை செய்ய இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சீர்காழி நகராட்சியில் சற்றித்திரியும் தெருநாய்களை கருத்தடை செய்வதற்கும் திரும்ப கொண்டு வந்து சேர்க்கவும் ஒரு நாய்க்கு ரூ.200/- வீதம் வழங்க வேண்டும். எனவே 464 தெரு நாய்களுக்கு மொத்த செலவினம் ரூ.92,800/.ஆகும். இச்செலவீனத் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது<br>**<u>அலுவலக குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் : 3197/2020/எச்1 | தீர்மானஎண்:1444<br>நாள்:25-06-2026<br>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்-7 | சீர்காழி நகராட்சி நகர் முழுவதும் 24 வார்டுகளில் சுற்றிதிரியும் தெரு நாய்கள் கருத்தடை செய்யும் பணி தொடங்கப்பட உள்ளது. கருத்தடை பின்னர் தெரு நாய்கள் மூன்று நாட்கள் பராமரிப்பு பணி மேற்கொண்ட பின்னர் வெளியே விட வேண்டும். தெரு நாய்களை கருத்தடை சிகிச்சைக்கு பின்னர் இரும்பினால் ஆன கூண்டு 10 நாய்கள் அடைக்கும் அளவிற்கு தேவைப்படும் இந்த கூண்டினை செய்வதற்கு தோராயமாக ரூ.75,000/- ஆகும். இச்செலவீனத் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் : 3197/2020/எச்1 | தீர்மானஎண்:1445<br>நாள்:25-06-2026<br>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்- 8 | சீர்காழி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மலக்கசடுகளை சேகரிப்பதற்கு தூய்மை இந்தியா திட்டம் நகர்புறம் 2.0 2023-2024-ன் கீழ் புதியதாக வாங்கப்பட்டுள்ள கழிவு நீர் அகற்றும் (வாகன எண்:TN82S1312) செயல்பட்டு வருகின்றது .இவ்வாகனத்திற்கான பொது சர்வீஸ் மற்றும் உபகரணங்களில் ஏற்படும் சிறு சிறு பழுதுகளை சரி செய்ய உத்தேச செலவினம் ரூ.50,000/- ஆகும். இச்செலவீனத் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2273/2024/எச்1. | தீர்மானஎண்:1446<br>நாள்:25-06-2026<br>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்- 9 | தேர்தல் அவசியம் கருதி சீர்காழி நகராட்சி பகுதியில் சுகாதார தூய்மை பணி மற்றும் தேர்தல் வாக்கு சாவடிகள், வாக்கு எண்ணும் மையம் சிறப்பு பணி , காவல் நிலையம் , வட்டாட்சியர் அலுவலகம் போன்ற இடங்களின் தூய்மை பணியும் அவசியமானது இப்பணிக்கு மகளிர் திட்டம் மூலம் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு தளவாட பொருட்கள் | தீர்மானஎண்:1447<br>நாள்:25-06-2026<br>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>தூய்மை பணிக்கு பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. இதற்கான செலவினம் தொகை ரூ.2,25,600/. ஆகும். இச்செலவீனத் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் : 00619/2026/எச்1</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்- 10</td>
<td>சீர்காழி நகராட்சி தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நகராட்சி எல்லைக்குட்பட்ட வாக்குச்சாவடிகளில் மாற்றுதிறனாளிகள் வசதி வேண்டி தற்காலிக சாய்வுதளங்கள் அமைத்தல், கதவு சன்னல்கள் சீரமைத்தல், மேசை நாற்காலிகள் வாடகைக்கு ஏற்பாடு செய்தல், சாமியான பந்தல் அமைத்தல், மின்சாரம் மற்றும் தேவையான குடிநீர் வழங்குதல், போன்ற பணிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மயிலாடுதுறை அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடித ந. க. எண் :572/2026/அ2 நாள் :20.03.2026 -ன் படியும் தேர்தல் பொது மேற்பார்வையாளர் அவர்களின் கடித நாள்:20.03.2026 படியும் பணிகள் ரூ.5.00 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து 2026-27-ன் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இப்பணியினை தேர்தல் விதிமுறைகள் அமலில் இருந்ததனால் பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 57 (7) ன் படி மேற்கொள்ளப்பட்டது என மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக்குறிப்பு:- பணியின் அவசரம் அவசியம் கருதி பணி மேற்கொள்ளப்பட்டதை<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந. க. எண் .473/2026/இ1</td>
<td>தீர்மானஎண்:1448<br>நாள்:25-06-2026<br>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்- 11</td>
<td>சீர்காழி நகராட்சிக்கு சொந்தமான காந்தி பூங்கா, TT பிள்ளை பூங்கா, முருகன் பூங்கா, நகர்மன்ற தலைவர் இல்லம் மற்றும் நகராட்சி அலுவலகம் ஆகிய இடங்களில் தினசரி நாளிதழ்கள் விநியோகம் செய்யப்பட்டதற்கான பட்டியல் விவரம் கீழ் கண்டவாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>மாதம்/ஆண்டு</th><th>தினசரி நாளிதழ் பெயர்</th><th>ஏஜென்ட் பெயர்</th></tr>
<tr><td>1</td><td>ஏப்ரல் – 2025 முதல் மார்ச் - 2026 வரை</td><td>தினத்தந்தி</td><td>G.நடராஜன்</td></tr>
<tr><td>2</td><td>ஏப்ரல் – 2025 முதல் மார்ச் - 2026 வரை</td><td>தினமலர்</td><td>G.நடராஜன்</td></tr>
<tr><td>3</td><td>ஏப்ரல் – 2025 முதல் மார்ச் - 2026 வரை</td><td>தினகரன்</td><td>S.கார்த்தி</td></tr>
<tr><td>4</td><td>ஏப்ரல் – 2025 முதல் மார்ச் -</td><td>தினமணி</td><td>N.சேட்டு</td></tr>
</table></td>
<td>தீர்மானஎண்:1449<br>நாள்:25-06-2026<br>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2026 வரை | | | | |
| 5 | ஏப்ரல் – 2025 முதல் மார்ச் - 2026 வரை | மாலைமலர் | N.சேட்டு | | 6,195/- |
| | | | | கூடுதல் | 47,686/- |

மேற்படி நாளிதழ்கள் விநியோகம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.47,686/- ஐ நகராட்சி பொது நிதியில் வழங்கி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம் .

ந.க.எண்:6272/2006/இ1

| | | |
|---|---|---|
| பொருள் எண்- 12 | சீர்காழி நகராட்சி தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நகராட்சி எல்லைக்குட்பட்ட வாக்குச்சாவடிகளில் மாற்றுதிறனாளிகள் பயன்படுத்தக்கூடிய சக்கரநாற்காலிகளை கொள்முதல் செய்திட வேண்டி மாவட்ட ஆட்சித்தலைவர் மயிலாடுதுறை அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடித ந. க. எண் .333/இநிம/2026 . நாள் :07.04.2026 -ன் படி 14 எண்ணிக்கைகள் சக்கரநாற்காலிகள் RR Remedies 32 A இரண்டாவது அக்ரஹாரம் சேலம் என்ற நிறுவனத்தின் மூலமாக கொள்முதல் செய்யப்பட்டது. இதற்கான பட்டியல் தொகை ரூ.73,500 வரப்பெற்றது. இத்தொகையினை நகராட்சி பொதுநிதி 2026-2027 -ன் கீழ் பணியின் அவரம் அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 57 (7) ன் படி மேற்படி நிறுனத்திற்கு வழங்கப்பட்டது என மன்றத்தின்பார்வைக்கு வைக்கப்படுகிறது,<br>**அலுவலக குறிப்பு**:. பணியின் அவசரம் அவசியம் கருதி தொகை வழங்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந. க. எண் .473/2026/இ1 | தீர்மானஎண்:**1450**<br>நாள்:**25-06-2026**<br>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**.** |
| பொருள் எண்- 13 | சீர்காழி நகராட்சி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) 2021 -2022 இன் கீழ் சீர்காழி அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் உட்புற நோளிகளுடன் வரும் உறவினர்கள் தங்கும் கட்டிடம் **ரூ.90.00 இலட்சம்** மதிப்பீட்டில் கட்டிமுடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வரப்பெற்றது. மேற்படி கட்டிடம் கட்டும் பணிக்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் திருமதி என். விஜயா என்கிற ஒப்பந்ததார் குறைவான ஒப்பந்தபுள்ளிகள் வழங்கி பணி உத்திரவு பெற்று பணியினை முடித்து பட்டியல் தொகையும் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான முடிவறிக்கை 24.10.2024 அன்று நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் தஞ்சாவூர் ந.க.எண் 1342/2021/பி1 கடிதத்தின் படி பெறப்பட்டுள்ளது. மேலும் இப்பணியில் தணிக்கை தடைகள் ஏதும் இல்லை ஒப்பந்ததார்க்கு பட்டியல் தொகை வழங்கி 3 ஆண்டுகளுக்கு மேல்முடிவடைந்து உள்ளதால், ஒப்பந்ததாரர் பணிக்கு செலுத்திய முன் | தீர்மானஎண்:**1451**<br>நாள்:**25-06-2026**<br>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**.** |

| | | |
|---|---|---|
| | வைப்புத்தொகை **ரூ.90,000/** த்தினை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**. மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க .எண் : 8அ/2020/இ1 | |
| பொருள் எண்- 14 | அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் அரசு கடிதம் எண்:2807/மா.நா.1/2026-1 நாள்:18.05.2026 கடிதத்தில் அம்மா உணவகங்களுக்கு தேவைப்படும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், சமையல் உபகரண பொருட்களை உடனடியாக கொள்முதல் செய்வதற்கும் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவீனங்களை மேற்கொள்ளும்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே சீர்காழி நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் இயங்கி வரும் அம்மா உணவகத்தை ஆய்வு செய்து உள்கட்டமைப்பு சீரமைப்பதற்கும், பழுதடைந்துள்ள உபகரணங்களுக்கு பதிலாக புதியதாக உபகரண பொருட்களை கொள்முதல் செய்வதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை **ரூ.5.00 இலட்சம்** ஆகும். இச்செலவீனத்தினை 2026-27 பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேலும் பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கோரி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு**: நகர்மன்றத்தலைவர் அவர்கள் முன் அனுமதி பெறப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:1025/2026/இ1 | தீர்மானஎண்:**1452**<br>நாள்:**25-06-2026**<br>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்- 15 | சீர்காழி நகராட்சியில் 15வது நிதிக்குழு மானிய திட்டம்(15th CFC Tied Grant) 2025-26 -ன் கீழ் ரூ.206.00 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்களுக்கு மக்கள் செய்தி தொடர்பு துறை,மாவட்ட ஆட்சியரகம், மயிலாடுதுறை அவர்களின் வழியாக தினசரி செய்தித்தாளில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டதற்கான பட்டியல் தொகை வழங்ககோரி Vipras Adz, F1 ,Pace park, No.10/27, 6Th Cross Street,Shenoy Nagar,Chennai நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றது. மேற்படி,பட்டியல் தொகை **ரூ.91,823/-** த்தினை நகராட்சி பொதுநிதியின் கீழ் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந. க. எண் : 1479/2025/இ1. | தீர்மானஎண்:**1453**<br>நாள்:**25-06-2026**<br>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்- 16 | அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் அரசு கடிதம் எண்:2807/மா.நா.1/2026-1 நாள்:18.05.2026 கடிதத்தில் அம்மா உணவகங்களுக்கு தேவைப்படும் உள்கட்டமைப்பு வசதிகளை | தீர்மானஎண்:**1454**<br>நாள்:**25-06-2026**<br>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>மேம்படுத்துவதற்கும், சமையல் உபகரண பொருட்களை உடனடியாக கொள்முதல் செய்வதற்கும் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவீனங்களை மேற்கொள்ளும்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது. எனவே சீர்காழி நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் இயங்கி வரும் அம்மா உணவகத்தை ஆய்வு செய்து உள்கட்டமைப்பு சீரமைப்பதற்கும், பழுதடைந்துள்ள உபகரணங்களுக்கு பதிலாக புதியதாக உபகரண பொருட்களை கொள்முதல் செய்வதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 5.00 இலட்சம் ஆகும் இச்செலவீனத்தினை 2026-27 பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேலும் பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தில் 16.06.2026 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்டுள்ளவாறு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><td>வ எண்</td><td>ஒப்பந்ததாரின் பெயர்</td><td>மதிப்பீடு (தொ</td></tr>
<tr><td>1</td><td>பிரக்யா எண்டர்பிரைஸஸ் விழுப்புரம்</td><td>416525,06</td></tr>
<tr><td>2</td><td>திவ்சாமாரி கன்ஸ்சரக்சன் மயிலாடுதுறை</td><td>418996,98</td></tr>
</table>
மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1 ல் பிரக்யா எண்டர்பிரைஸஸ் விழுப்புரம் என்ற ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்பகிடுகிறது.<br><br>
<u>அலுவலக்குறிப்பு</u>: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>
ந.க.எண்:1025/2026/இ1</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்- 17</td>
<td>இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய காய்கறி வளாகம் கடை எண்.16, ல் உள்ள குத்தகைதாரர் திரு.கார்த்திகேயன் தனது சொந்த விருப்பத்தின் பேரில் 31.03.2026 வரையிலான மேற்படி கடைக்கான வாடகை தொகையினை இந்நகராட்சி கருவூலத்தில் நிலுவையின்றி செலுத்தி மேற்படிகடை எண் 16-ஐ, 01.04.2026 முதல் இந்நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். ஆகையால் மேற்படி கடை எண்.16,ஐ ஏலம் விடுவதற்கு ஒப்பந்தபுள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>
<u>அலுவலக குறிப்பு</u> . மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந க எண் 709/2026/அ1</td>
<td>தீர்மானஎண்:1455<br>நாள்:25-06-2026<br>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்- 18</td>
<td>இந்நகராட்சியில் 2026-2027-ம் ஆண்டிற்கான சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி போன்ற வரியினங்களுக்கான வரி விதிப்புதாரர்களுக்கு நடப்பாண்டிற்கான கேட்பு அறிவிப்பினை சார்வு செய்ய வேண்டியுள்ளதால் மேற்படி வரியினங்களுக்கு கேட்பு அறிவிப்பினை மயிலாடுதுறை மாவட்ட கூட்டுறவு அச்சகத்திலிருந்து</td>
<td>தீர்மானஎண்:1456<br>நாள்:25-06-2026<br>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | அச்சடித்து பெறுவதற்கும் இதற்காகும் உத்தேச செலவீனத் தொகை ரூ.60,000/. ஆகும். இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு-** 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண். 00786/2026/அ1. | |
| பொருள் எண்- 19 | வரிவசூல் மார்ச்-2026 நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் வரிவசூல் தொடர்பாக நடைபெற்ற ஆய்வுக்கூட்டங்களில் இந்நகராட்சி வரிவசூலில் மிகவும் பின்தங்கியுள்ளதாலும், வரிவசூல் தொடர்பாக வரிவிதிப்பாளர்களிடம் இருந்து வரிவசூல் செய்திட ஆட்டோவுடன் கூடிய ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்திடவும் தினசரி செய்தி நாளிதழ்களில் விளம்பரம் செய்திடவும் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டது.<br>இதன்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் வரியில்லா இனங்களின் நிலுவை மற்றும் நடப்பு தொகையினை ஆட்டோவுடன் கூடிய ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்து வரிவசூல் செய்திடவும் 14.02.2026 முதல் 31.03.2027 வரை ஆகும் இதர செலவீனங்களுக்கும் ரூ.1,75,000/- த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**. வசூல் தொடர்பாக ஆகும் செலவினங்களுக்கு மன்றம்<br>அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 859/2026/அ1 | தீர்மானஎண்:1457<br>நாள்:25-06-2026<br>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| பொருள் எண்- 20 | சீர்காழி நகராட்சிக்கு சொந்தமான புதியபேருந்து நிலையம் கடை எண் 4 க்கு கடந்த 16.06.2026 அன்று மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியதில் திரு சாகுல் அமீது இரண்யநகர் சீர்காழி என்பவர் இந்நகராட்சிக்கு செலுத்தவேண்டிய பொறுப்புத்தொகை ரூ 2,00,000/- மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.1,00,000/- வரைவோலையாக செலுத்தி ஏலத்தில் கலந்துக்கொண்டார். நகராட்சி கடைகளுக்கான ஏலம்/ஒப்பந்தபுள்ளிகள் பல தடவைகோரியும் எவரும்ஏலம்/ஒப்பந்தபுள்ளியில் கலந்துக்கொள்ளவில்லை என்பதனால் நகராட்சிக்கு நிதிஇழப்பு ஏற்படாமலிருக்க, மேற்படி நபர்க்கு கீழ் கண்டுள்ளவாறு அரசு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை அடிப்படையில் ஏலம் விடப்பட்டது. | தீர்மானஎண்:1458<br>நாள்:25-06-2026<br>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| வ எ ண் | கடையின் விபரம் | ஏலத்தாரரின் பெயர் | 2023-2024 பழைய வாடகை ரூ | 15 சதவீதம் உயர்வு ரூ | அரசு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை ரூ | அரசு ஏலம் கோரிய வாடகை தொகை ரூ |
|---|---|---|---|---|---|---|
| 1 | புதியபேருந்து நிலையம் கடை எண் 4 | திரு சாகுல் அமீது இரண்யநகர் சீர்காழி | 8596/- | 9885/- | 10000/- | 10000/- |

மேற்கண்டுள்ள அட்டவணையின் படி அரசுமதிப்பினை விட கூடுதலாக மாதம் ஒன்றிக்கு **ரூ.10,500/-** க்கு ஏலம் சென்றதால் **திரு.சாகுல் அமீது** இரண்யன் நகர் சீர்காழி என்ற நபர்க்கு குத்தகை நிபந்தனைகள் அடிப்படையில் வாடகைக்கு உரிமம் வழங்கி கடையினை நகர் மன்றத்தின்முன்அனுமதி பெற்று ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>: மன்றம் அனுமதிக்கலாம்

ந. க. எண் : 1123/2016/அ1

| பொருள் எண்- 21 | இந்நகராட்சிக்கு 2026-27 ஆம் ஆண்டிற்கு தேவையான எழுதுப்பொருட்கள் பதிவேடுகள் மற்றும் கணினி வரிவசூல் பல்வகை ரசீதுகள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவீனத் தொகை ரூ.5.00**இலட்சம்** ஆகும். இச்செலவீனத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மேற்படி பொருட்களை மயிலாடுதுறை மாவட்ட கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து வாங்கிக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1525/2020/டி2 | தீர்மானஎண்:**1459**<br>நாள்:**25-06-2026**<br>அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
|---|---|---|

(ஒம்) திருமதி.**R**துர்காபரமேஸ்வரி.**MBA.,**
நகர்மன்றதலைவர்,
சீர்காழிநகராட்சி.